1639

# பாலர் கல்வி.

தொகுதி:-1 பகுதி:-1

மார்ச்:- 1936

# விண்ணப்பம்

"பாலர் கல்வி" என்னும் மாதாந்தர தமிழ்ப் பத்திரிகை மாதந்தோறும் தென் இந்திய ஆசிரிய சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகை உபாத்தியாயர்களுக்குப் பலநன்மைகளைப் புரிதல் வேண்டும் என்றே வெளியிடப்படுகின்ற தாதலின் ஆசிரியர்கள் அனைவரும் இதனைப் போற்றவேண்டு மென்று உணர்ந்து ஆதரிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். ஆரம்ப ஆசிரியர்கள் நன்மைகளை ஆராய்ந்து எழுதுவதற்கு இப்பத்திரிகை இடம் தரும். போதனை முறைகளைப்பற்றி எழுதுவோர்க்கும் இப்பத்திரிகை இடம் தரும். பல வகையிலும் நன்மை புரியும் இப்பத்திரிகைக்கு "வருடச் சந்தா ரூபாய் இரண்டே, தனிப்பிரதி அணா நான்கு". ஆசிரியர்கள் அனைவரும் இதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்.

விலாசம்:—

மானேஜர்:
"பாலர் கல்வி,"
41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.



# பாலர் கல்வி

தொகுதி 1] 1936௵ மார்ச்சு௴ [பகுதி 1

## "பாலர் கல்வி"

"பாலர் கல்வி" யென்பது மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை யாகும். இது தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் வெளிவரும். ஆரம்ப ஆசிரியரின் முன்னேற்றத்தையே முக்கியமாய் இப்பத்திரிகை நாடுவ தாகும். தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஆரம்பப் பாடசாலைகள் அடிப் படையாவன. மகா நாடுகளில் நமது தலைவர்கள் ஆரம்பப் படிப்பினைப் பற்றி அடிக்கடி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அரசாங்கத்தாரும், குறிப்புகள் மூலமாயும் ரிபோர்டு மூலமாயும், பல கொள்கைளை வெளியிட் டிருக்கிறார்கள். நம் மாகாணத்தில் ஆரம்பக் கல்வி விஷயமாய்க் கிளர்ச்சி யேற்பட்டிருப்பது மெச்சத் தக்கது. ஆரம்பப் பாடசாலைகள் சரியான நிலையிலில்லை என்பார் சிலர். பாட திட்டம் மாற்றப்பட வேண்டுமென்று நினைப்பார் சிலர். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கவனிப்பாரில்லை யென்று சொல்வோர் சிலர். மற்றும் சிலர், ஆசிரியர்களை அசட்டை செய்வது சரியல்லவென்றும் அவர்களின் நிலையைக் கவனித்தல் அவசியமென்றும், வற்புறுத்துகிறார்கள். ஒருவரை யொருவர் குற்றஞ்சாட்டிப் பொழுது போக்கும் காலம் இதுவல்ல. ஆரம்பப் படிப்பில் ஈடுபட்ட ஒவ்வொரு கூட்டத்தாரும் அது சம்பந்தமான பல அம்சங்களைக் கவனித்தல் அவசியம். ஆரம்பக் கல்வி உயர்ந்த பதவியை அடைய, ஆசிரியர்களாகிய நாம் எவ்வித உதவியைச் செய்ய முடியுமென்று யோசிக்க வேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கூடம் சேரும்படி செய்வது நம்மால் முடியும்.

சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் பதினொரு வயதுவரை இருக்கும்படிச் செய்தலும் நம் கடமை. பள்ளிக்கூடம் வந்துகொண்டிருக்கும் குழந்தைகள் செவ்வையாய்ப் படிப்பதும் ஆசிரியர்களின் உழைப்பினாலேயே. குழந்தைகளுக்குச் செய்யும் தொண்டே தேசத்திற்குச் செய்யும் தொண்டு என்ற உணர்ச்சி ஆசிரியர்களிடம் தோன்றவேண்டும். இப் பத்திரிகையில் வெளியிடப்படும் ஆசிரியர்களுடைய கட்டுரைகளாலும் ஆராய்ச்சிகளாலும் ஆசிரியர்கள் ஆரம்பப் படிப்பின் பொறுப்பை வகிக்கக்கூடுமென நாம் நம்புகிறோம். தம்முடைய கொள்கைகளையும் அநுபவங்களையும் அடிக்கடி பத்திராதிபருக்கு தெரிவிக்கும்படி ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்பத்திரிகையை ஆசிரியர்கள் தங்களுடைய பத்திரிகையென்றே திண்ணமாய்க் கொள்ளலாம். தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. போதனா முறைகளைப் பற்றிப் பெரியோர்கள் சிலர் கட்டுரை எழுதுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்பத்திரிகையால் ஆசிரியர்களுக்குப் பயனுண்டென்று உறுதியாய்ச் சொல்லலாம். ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நம்பியே இப்பத்திரிகையைத் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் வெளியிடத் தீர்மானித்தது.

ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு இப்பத்திரிகை நீண்ட காலம் செவ்வையாய் உழைத்து வருமாறு ஏற்பாடு செய்வது ஆசிரியர்களுடையவும் மானேஜர்களுடையவும் கடமையாகும். இப் பத்திரிகையின் வருஷச் சந்தா ரூபாய் இரண்டே.

---

162273

JL
Tm 211, r136
N36·1-1

# கதைகளும் கதை சொல்வதும்

---

(M. S. சுந்தரேசுவரன், M. A., L. T.,)

எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் சிறு பிள்ளைகளுக்குக் கதை சொல்வது ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. சாதாரணமாக, மாதத்திற்கு ஒரு கதை வீதம் பத்துப் பன்னிரண்டு கதைகள் போதிப்பது வழக்கம். அப்போதனையால் ஏற்படும் பலனைப் பார்க்குமளவில், அது வெவ்வேறு விதமாக இருக்கிறது. சில பாடசாலைகளில், பிள்ளைகள் சொன்ன கதைகளைத் திரும்பச் சொல்லத் தெரியாதவர்களாய்க் கதை தெரியாதென்று தலையை ஆட்டிவிடுகிறார்கள். மற்றும், சில பாடசாலைகளில் ஒன்றிரண்டு பிள்ளைகள் மாத்திரம் கற்ற கதைகளை ஒரு விதமாகச் சொல்லுகிறார்கள். வேறு சில பாடசாலைகளில், பிள்ளைகள் கதைகளைக் குருட்டுப் பாடம்பண்ணிக் கிளிப் பிள்ளையைப்போல் ஒப்பிக்கிறார்கள். கதை சொல்வதில் பிள்ளைகளுக்கு இயல்பான உற்சாகம், நயம், குதூகலம் இவை காணப்படுவதில்லை. இக்காரணங்களால், கதை சொல்வதின் நோக்கமே கைகூடாமல் போய்விடுகிறது. ஆதலின் ஆசிரியர் கதை சொல்வதின் நோக்கத்தை ஆராய்ந்தறிந்து, அந்நோக்கம் நிறைவேற ஏற்ற வழிகளைத் தேட வேண்டும்.

நோக்கம் :—'நாம் ஏன் கதை சொல்லுகிறோம்' என்ற கேள்வியை ஒவ்வோர் ஆசிரியரும் கேட்டுக்கொண்டு, அதன் விடையை ஆராய்ந்தறிய வேண்டும். அப்போதுதான் எவ்விதமான கதைகளைச் சொல்லவேண்டும், அவற்றை எப்படிச் சொல்லவேண்டுமென்பது புலப்படும். இவ்விதமாக நோக்கத்தை ஆராய்ந்தறியாத காரணத்தால்தான் முன் கூறிய குறைகள் காணப்படுகின்றன. கதை சொல்வதின் நோக்கங்களாவன :—

(1) பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் மூட்டுதல்.

(2) உற்சாகத்தை யுண்டாக்கிக் கதைகள் மூலமாக வாழ்க்கைக்குச் சம்பந்தமான சுலபமான விஷயங்களைப் போதித்தல்.

(3) இயல்பான நடையில் பேசுவதற்குப் பழக்கம் செய்து புதிய பதங்களை அறியச் செய்தல்.

இவைகளில் குழந்தைகளை உற்சாகப்படுத்துவதே முக்கியமான நோக்கமாகும்.

ஆசிரியரின் குணங்கள் :—மேற்கண்ட நோக்கங்கள் கைகூடவேண்டுமானால், ஆசிரியரிடம் சில முக்கியமான குணங்கள் இருக்கவேண்டும். அவை யாவன :—

(1) குழந்தைகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்க ஆசிரியர் உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் இருக்கவேண்டும். அவரிடம் உற்சாகம் இல்லையெனின், அவர் பிள்ளைகளுக்கு உற்சாகத்தை யூட்ட இயலாது.

(2) ஆசிரியர், பிள்ளைகளோடு பிள்ளையா யிருந்து, தன்னை மறந்து கதை சொன்னால்தான் உற்சாகம் ஏற்படும். வீடுகளில் பெரியோர்கள் குழந்தைகளுக்கு எப்படிக் கதை சொல்கிறார்களோ அப்படியே, இயல்பாகப் பேசுவதுபோல் இவர் கதை சொல்லவேண்டும்.

(3) ஆசிரியர் நல்ல கற்பனா சக்தி உடையவராய் இருக்கவேண்டும். வருணிக்கும் காட்சியை மனத்தில் பாவித்து அதில் அவர் ஆழ்ந்து மூழ்கிவிடவேண்டும். அப்போதுதான் வருணிக்கப்படும் காட்சி பிள்ளைகளுக்கு உண்மையானதுபோல் தோன்றி, அவர்களிடம் ஆசையையும், வியப்பையும், உற்சாகத்தையும் உண்டாக்கும்.

(4) ஆசிரியர் தன்னை முற்றிலும் மறந்துவிட்டு, பிள்ளைகளோடு பிள்ளையாய் இருக்கவேண்டும். வயதிலும், அறிவிலும் முதிர்ந்தவரென்றும், தம் முன்னிருக்கும் பிள்ளைகள் ஒன்று மறியாதவர்களென்றும் அவர் நடந்துகொண்டால் பிள்ளைகளுக்கு சங்கோசம், பயம் அதிகரித்து, கதையைத் தெரிந்துகொள்ளும் ஆசையுண்டாகாது. ஆசிரியர், தாமும் ஒரு பிள்ளையாகவே அவர்களிடையில் விளங்கி, அவர்களைத் தம் அன்பால் உற்சாகப்படுத்தி, சங்கோசத்தையும், பயத்தையும் போக்க முயலவேண்டும்.

## எத்தகைய கதைகள் ஏற்றவை ?

சிறு பிள்ளைகள், பலவிதமான விநோதங்களும், ஆச்சரியங்களும் நிறைந்த உலகில் புதிதாக வந்துள்ளார்கள். அவர்கள், தங்கள் அனுபவத்திலடங்கிய விஷயங்களில் மிக்க உற்சாகமுள்ளவர்கள். சுற்றிலும் சதா காணப்படும் மாறும் நிறமும், ஓயா இயக்கமும், சிக்கலான ஒலியும் அவர்கள் கவனத்தைக் கவர்கின்றன. ஆகவே, சிறுவர்க்கான கதைகள், அவர்கள் அனுபவத்தில் எதிர்ப்படும் சம்பவங்களைக் குறித்தவையாயும், நிறம், இயக்கம், ஒலி இவை கூடியவையாயும் இருத்தல் வேண்டும். தவிர, கதை சிறியதாயும் இருக்கவேண்டும். சொல்லும் கதை, உற்சாகம், வியப்பு, இவற்றை யூட்டும் விதமாகத் தொடங்கி, நேர் வழியாகச் சென்று, ஆச்சரியகரமான முடிவைப்பெற வேண்டும். கதை எவ்வளவு நீளமாயிருக்கலாமென்பது பிள்ளைகளின் வயது, மனப் பக்குவம் இவற்றை யொத்துள்ளது. பழக்கத்தில், எவ்விதமான கதைகள் எவ்வெவ் வகுப்புக்கு ஏற்றவை யென்பதை ஊக்கமுள்ள ஆசிரியர் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். வழக்கமாக வீடுகளில் தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சொல்லும் கதைப் பாட்டுகள், அவர்களின் உற்சாகத்தை மூட்டக்கூடியவை யாதலால், அப்பாட்டுக்களையும் உபயோகிப்பது நலமாகும். சுருங்கச் சொல்லின், கதையின் துவக்கம் கவனத்தைக் கவர்ந்து அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையை மூட்டக்கூடிய வண்ணமாய் இருக்கவேண்டும்; அனாவசியமான வருணனை, உட் கதைகள் இவையில்லாமல் சுருங்கியதாய் இருக்கவேண்டும்; கூறப்படும் சம்பவங்கள் உற்சாகத்தைப் பெருக்கி ஆச்சரியகரமான முடிவை யடைய வேண்டும்.



முதலில், கதைகள் குழந்தைகளின் செயல்கள், வீரச் செயல்கள் இவற்றை யொட்டியவையாய் இருக்கவேண்டும். பிறகு, குழந்தைகளோடு பழகும் பிராணிகளைப்பற்றிய கதைகள் ஏற்றவையா யிருக்கும். நாய், பூனை, பசு, பறவைகள் இவைகளைப்பற்றிய கதைகளைக் கேட்பதில் குழந்தைகளுக்கு ஆசையும், உற்சாகமும் உண்டு. இதன் பிறகு காட்டு மிருகங்களைப் பற்றிய கதைகளையும், விநோதக் கதைகளையும், சொல்லலாம்.

தயாரிப்பு :—கதை சொல்லப்புகும் ஆசிரியர், கதையைத்தேர்ந்தெடுத்து முன்பாகவே நன்றாகத் தயாரித்துக் கொள்ளவேண்டும். தமக்கு ஏற்றவையெனத் தெரியும் கதையையே தேர்ந்தெடுக்கவேண்டும். பிறகு, அக்கதையை நன்றாகப் படித்தறிந்து மனனம் செய்வது நலம். அப்போதுதான் கதையைத் தங்கு தடை இல்லாமல் சொல்லவும், நடுவில் ஏற்படும் எதிர்பாராத கஷ்டங்களிலிருந்து மீளவும் இயலும். கதை சொல்லும்போது சமயத்திற்கு ஏற்றபடி நடித்தும், தொனியை நிதானமாக வைத்துக்கொண்டு பாத்திரங்களுக்குத் தக்கபடி மாற்றிக்கொண்டும், மிருகங்கள் பட்சிகள் இவற்றைப்போல் ஒலித்துக்கொண்டும் சொல்லவேண்டும். கதையின் பல அம்சங்கள், வாயினால் சொல்வதைக் காட்டிலும் சைகைகளாலும், முகக்குறிகளாலும் நன்கு விளக்கக்கூடியவையா யிருக்கும். ஆகவே, ஆசிரியர் கதையில் மூழ்கிச் சைகைகளையும், ஏற்ற முகக்குறிகளையும் உபயோகிப்பது அவசியம். ஒரே விதமான தொனியில் பேசுவது கதையை உற்சாக மற்றதாக்கும்.

வகுப்புப் பிள்ளைகள் கதை சொல்வதில் உற்சாக மற்றவர்களாய்க் காணப்பட்டால், கதையைச் சொல்லத் தொடங்காமல், அவர்களோடு ஏற்ற விதமாய்ச் சம்பாஷணை செய்து, அச்சம்பாஷணையிலிருந்து பிள்ளைகள் உணராமலே கதைக்குப் போகும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் பிள்ளைகளுக்குக் கதை சொல்வதில் சில நாட்களிலேயே உற்சாகம் ஏற்பட்டுவிடும்.

கடைசியாகப் பிள்ளைகளுக்கேற்ற கதைகளை ஆசிரியர்கள் சேர்த்துக் கொண்டே வரவேண்டும். அதே கதைகளை வருஷா வருஷம் சொல்வதென்றால் ஆசிரியருக்கே வெறுப்பும், அசிரத்தையும் ஏற்படக்கூடும். அப்போது கதை, பிள்ளைகளிடம் யாதொரு பயனையும் விளைக்காது. தவிர, சொல்லும் கதை பழைய கதையாயிருந்தாலும், அதைப் புதுக் கதையைப் போல் உற்சாகத்தோடும், நயத்தோடும் சொல்லவேண்டும்.

கதை சொல்வது மேற்கூறியவகையாக இருந்தால், அது போற்றக் கூடிய பலவிதமான நற்பயன்களைப் பயக்குவதாகும். கதையைக்கேட்பதிலும், சொல்வதிலும் ஆர்வத்தையும், ஆசையையும் உண்டாக்கும்; பிள்ளைகளுக்கு இயல்பான சங்கோசம், பயம் இவற்றை நீக்கி, அவர்களைப் பேசுவதிலும், சம்பாஷிப்பதிலும் உற்சாகப்படுத்தும்; வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்களைச் சுலபமாக அறிந்துகொள்ள உதவியாகும்; அதனால் பிள்ளைகள் மேலும் மேலும் புதிய பதங்களைக் கற்று, அவற்றைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம்.

# இயற்கைப் பாடம்

(ஜி. பி. ஜேம்ஸ், பசுமலை.)

மாதிரிக் குருவின் லக்ஷணங்கள் :—சிறுவர்களுக்கு உபாத்தியாயராக இருப்பவர் மாதிரிக் குருவாக (Model Teacher) இருக்கவேண்டியது அவசியம். ஒரு குருவிடம் காணப்படவேண்டிய லக்ஷணங்கள் எல்லாம் அந்த உபாத்தியாயரிடம் காணப்படுமாயின் அவரை ஒரு மாதிரிக் குரு என்று கருதலாம். அப்படிப்பட்ட ஆசிரியரிடம் காணப்படும் லக்ஷணங்கள் எல்லாம் பிள்ளைகள் பின்பற்றக் கூடியவைகளாய் இருக்கவேண்டும். பிள்ளைகள் அகற்ற வேண்டிய லக்ஷணங்களில் யாதொன்றும் அவரிடம் காணப்படக்கூடாது. அப்படிப் பட்ட உபாத்தியாயர் பிள்ளைகளோடு பழகும்போது தாமும் ஒரு சிறுவன் என்று பாவித்துக்கொள்ள வேண்டும். சிறுவருக்குப் போதிக்க முன் வரும்உபாத்தியாயர் எப்போதும் அழியாத சிறு பிராயத்தையே பற்றமுயற்சி செய்யவேண்டும். சிறுவர்களைவிடத் தாம் வயது, அறிவு முதலியவற்றில் உயர்ந்தவர் என்று எப்போது ஒரு உபாத்தியாயர் அகங்காரம் அடைகிறாரோ அப்போதே அவர் பெருமையை இழக்கிறார். பிள்ளைகளின் மூத்த சகோதரன் என்றே அவர் எக்காலத்திலும் கருதி வரவேண்டும். தம்பிகள் போன்ற மாணவர்களுக்கு மலர்ந்த முகத்துடனும், அன்புடனும். ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் போதிக்க முன்வரவேண்டும். பிள்ளைகளுக்கும் சந்தோஷம், உற்சாகம், இன்பம், பிரியம் முதலியவை உள்ள விஷயங்களில் உபாத்தியாயரும் பற்றுதல் காட்டவேண்டும். இவற்றுடன் நல்ல ஸ்வபாவம், உண்மை, நம்பிக்கை முதலிய லக்ஷணங்கள் அவரிடம் காணப்படவேண்டும். இக் குணங்களுடன் அவர் நாளுக்கு நாள் தம் அறிவை விருத்திசெய்ய முயலவேண்டும்.

'முற்றும் உணர்ந்த வரில்லை முழுவதூம்
கற்றனம் என்று களியற்க—'

என்பதை அவர் ஒருநாளும் மறக்கக் கூடாது. நாளுக்கு நாள் பாடசாலைகளிற் கற்றுக் கொடுக்கப்படும் விஷயங்கள் முன்னேற்றம் அடைந்து கொண்டும் வருகின்றன. சமீபத்தில் முதல் மூன்று பாரத்து மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டிய ஜெனரல் ஸயன்ஸ் பாட அட்டவணையைப் பார்த்த அநேக ஆசிரியர் சென்ற வருஷம் மிகவும் பிரமித்துப் போயிருந்தனர். அட்டவணையில் குறிக்கப்பட்ட விஷயங்களை யெல்லாம் பிள்ளைகள் சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் கற்பதைக் காணும் உபாத்தியாயர் அதுவே தக்க பாட அட்டவணை என்று இப்போது கருதுகிறார்கள். சுமார் 10 வருஷங்களுக்கு முன் படித்த மாணவர்களை விட இப்போது இயற்கைப் பாடத்தில் அநேக புதிய விஷயங்களை அதே வகுப்



பிற்படிக்கும் மாணவர் தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கிறது. உலகம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்துகொண்டு வருவதை ஆசிரியர் ஒரு நாளும் மறக்கக்கூடாது. மேல்கண்ட லக்ஷணங்கள் எல்லாம் ஒரு ஆசிரியரிடம் காணப்படுமாயின் அவ்வூரிலுள்ள கிராமத்தாரும் பெற்றோரும் அவரைச் சிறந்த 'மாதிரி ஆசிரியர்' என்றும் 'சிறந்த குணசீலர்' என்றும் கருதுவார்கள். அவரிடம் கற்கும் மாணவர்கள் காந்தத்தினிடம் செல்லும் இரும்பைப்போலவே அவரை அன்புடன் பின்பற்றுவார்கள். அவரிடம் கற்பது பிள்ளைகளுக்கு ஒரு விளையாட்டுப் போலவும், மிக்க சந்தோஷத்தைக் கொடுப்பதாகவும் இருக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

மாணவரின் இயற்கையான சுபாவங்கள் :— இதுவரை மாதிரி ஆசிரியரின் லக்ஷணங்களைப் பற்றிக் கவனித்தோம். இனி அவரிடம் கற்கும் மாணவரிடம் காணப்படும் இயற்கையான சுபாவங்கள் எவை என்று தெரிந்து கொள்வோம். ஒரு வேலையும் செய்யாமல் கைகளைக் கட்டிக்கொண்டு ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்க ஒரு பையனும் பிரியப்படமாட்டான். அடிக்கடி நடமாடிப் பொருள்களைப் பார்ப்பதிலும், தொடுவதிலும் பிள்ளைகளுக்குப் பிரியமுண்டு. அப்படிப்பட்ட பிள்ளைகளை அடக்கியாள முயலுவது தவறான முறையாகும். பிள்ளைகள் இயற்கையாகவே சுறு சுறுப்பாக இருப்பார்கள். அவர்கள் விளையாடுவதும், பேசுவதும் நமக்கு விநோதமாகத் தோன்றும். ஆனால் அவர்கள் தாங்கள் முழுமனத்தையும் செலுத்திக் காரியங்களைச் செய்கிறார்கள். பிள்ளைகளுக்கு எவ்விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அவா அதிகம் என்பதை ஆராய்ச்சி செய்த வாஷ்பர்ன் அவர்கள் 2 வருஷ காலத்தில் நூற்றுக் கணக்கான பிள்ளைகளிடமிருந்து சுமார் 2000 கேள்விகளைச் சேகரித்திருக்கிறார். அவற்றில் சில பின் வருமாறு :—

1. ஏன் நக்ஷத்திரங்கள் கீழே விழுந்து விடவில்லை ?
2. சந்திரன் சூரியன் எவைகளாலானவை ?
3. இடியும் மின்னலும் எப்படி உண்டாகின்றன ?
4. மோட்டாரும், புகை வண்டியும் எவ்விதம் ஓடுகின்றன ?
5. தாவரங்கள் இல்லாவிட்டால் என்ன ஆகும் ?
6. வானவில் ஏன் காணப்படுகிறது ?
7. பகல் இரவு உண்டாவதெப்படி ?
8. கிரகணங்கள் எப்படி உண்டாகின்றன ?

மேல் கண்ட விதமான கேள்விகள் ஆச்சரியத்தால் ஏற்படுகின்றன. இப்படி ஆச்சரிய குணங்கூடிய சுபாவமுள்ள பிள்ளைகளின் அறிவை விருத்தி செய்வதற்கு இயற்கைப் பாடமே மிகவும் பிரயோஜனமானது. புத்தகங்களிலும் வகுப்பறைகளிலும் மாத்திரம் இயற்கைப் பாடங்கற்கும்

மாணவர் இயற்கைத் தோற்றங்களைக் கண்டு ஆனந்திக்க மாட்டார்கள். தோட்டம், நதி, மலை, மேகம், மழை, சூரியோதயம், அஸ்தமனம், நக்ஷத்திரங்கள் முதலியவற்றைப் பிள்ளைகள் நேரில் பார்க்குமாறு உபாத்தியாயர் அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு போகவேண்டும். இயற்கைத் தோற்றங்களைப் பிள்ளைகள் நேரில் பார்த்து ஆனந்திக்க வேண்டும்.

இயற்கைப் பாடம்:— இயற்கைப் பாடம், எப்போது பாடசாலைகளில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களில் ஒன்றாக ஏற்படுத்தப் பட்டது என்பதை இங்கே எடுத்துக் காட்டலாம். சுமார் 50 வருஷங்களுக்கு முன் டாக்டர் வில்ஸன் அவர்கள் சென்னை மாகாண சர்வகலாசாலையில் ஸயன்ஸை ஒரு பாடமாக முதல் முதல்நமது இராஜதானியில் ஏற்படுத்தினார். சில வருஷங்களுக்குப் பின் பிரைமரி பாடசாலைகளில் பொருட்பாடம் என்ற தலைப்பின் கீழ்ப் பிள்ளைகள் இயற்கை வஸ்துக்களைப்பற்றி வெகுநாள் படித்து வந்தார்கள். இப்பாடங்களில் பிள்ளைகள் தங்களைச் சுற்றிக் காணப்படும் தாவரங்கள், பிராணிகள், இன்னும் இதரப் பொருள்கள் முதலியவைகளைப் பற்றியே படித்து வந்தார்கள். அதுபோதுமானது அன்று என்று கண்டறியப்பட்டு அதற்குப்பதிலாக இயற்கைப் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இயற்கையில் காணப்படும் விஷயங்களைக் கவனிப்பதும், கவனித்தவைகளிலிருந்து சரியான உண்மைகளைக் கண்டறிதலும், பின் அவற்றை அனுபவித்துச் சந்தோஷப்படுவதுமே இயற்கைப் பாடங்களின் நோக்கமாகும். இப்பாடங்களில் பிள்ளைகள் தோற்றங்களைக் கவனிப்பார்கள். வஸ்துக்களைத் தொட்டுப் பார்ப்பார்கள். பொருள்களைப் பரிசோதிப்பர். பரிசோதனைகள் மூலம் புதிய விஷயங்களைக் கண்டறிவர். பிள்ளைகள் இவ்வேலைகளைச் செய்வதற்குத் தக்க உதவியை மாத்திரம் உபாத்தியாயர் செய்யவேண்டுமே யன்றி விஷயங்களைத் தாமே சொல்லிவிடக் கூடாது. இப்பாடங்களில் பிள்ளைகள் உருப்போட வேண்டியது ஒன்றுமில்லை.

## இயற்கைப் பாடமும், தோட்டமும்

இயற்கைப் பாடம் கற்பிப்பதற்குத் தோட்டம் மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு சிறு தோட்டமாகிலும் இருக்க வேண்டும். தோட்டத்திற்கு வசதியற்ற பள்ளிக்கூடங்களில் 'இயற்கைப் பாட மேஜை'யாகிலும் ஒன்று அவசியம். இம்மேஜை பலகையால் செய்யப்பட வேண்டுமென்பது அவசியமன்று. செங்கலாலான ஒரு சிறு திண்ணை போதுமானது. இங்கே சிறு தொட்டிகளை வைத்து அவற்றில் தாவரங்களை வளர்த்து அதன் மூலம் இயற்கைப்பாடம் போதிக்கப்படலாம். அழகிய புஷ்பங்களும், குரோடன்களும், இன்னும், தோட்டங்களிலும் வயல்களிலும் பயிரிடப்படும் தாவரங்களும் வளர்க்கப்பட்டு அவற்றின் சரித்திரங்களைப் பிள்ளைகள் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி செய்யலாம். சிறு கண்ணாடித் தொட்டிகளையாவது வாயகன்ற சீசாக்களையாவது



அத்திண்ணையில் வைத்து அவற்றில் மீன், தவளை, பட்டுப் பூச்சி முதலிய பிராணிகளை வளர்த்துப் பிள்ளைகள் அவற்றின் ஜீவிய சரிதைகளைத் தெரிந்துகொள்ளுமாறு செய்யலாம்.

தோட்டங்கள் உள்ள பள்ளிக்கூடங்களில் இயற்கைப் பாடம் இன்னும் நன்றாகப் போதிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு வகுப்புக்கும் தனித் தனியாக இடங்கள் பிரித்துக் கொடுத்து, அந்த அந்த வகுப்பு மாணவர்களை அவ்விடங்களிலுள்ள தாவரங்களின் வளர்ச்சிக்குப் பொறுப்புள்ளவர்களாக நியமிப்பது நல்ல முறையாகும். ஒவ்வொரு வகுப்புக்கும் கொடுக்கப்பட்ட இடத்தை இன்னும் சிறு சிறு பாத்திகளாகப் பிரித்து, ஒவ்வொரு பாத்தியையும் இரண்டு அல்லது மூன்று பையன்களிடம் ஒப்புவிக்கலாம். இவ்விதம் செய்வதால் வகுப்பிலுள்ள ஒவ்வொரு பையனுக்கும் தோட்டத்தின் மேல் பற்றுதல் ஏற்படுவதுமன்றி, பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்கள் எல்லாம் தோட்டத்தின் பலன்களுக்கு உடந்தையாகிறார்கள். இவ்வித வேலைக்கெல்லாம் உபாத்தியாயரே முன் நின்று உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் பிள்ளைகளைத் தூண்டவேண்டும்.

## இயற்கைப் பாடமும், உல்லாசப் பிரயாணமும்

தோட்டங்களில் மாத்திரம் இயற்கையை மாணவர் நன்றாய்த் தெரிந்துகொள்ளக்கூடும் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. மாதம் ஒரு முறையாவது உபாத்தியாயர் மாணவர்களை உல்லாசப் பிரயாணத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும். அப்பொழுது பாடசாலைகளிலுள்ள தோட்டங்களில் பார்க்கமுடியாத இயற்கை விவரங்களை மாணவர் தெரிந்துகொள்வார்கள். பட்டணங்களிலுள்ள மாணவர்களை உபாத்தியாயர் சமீபத்திலுள்ள மலைகளுக்கும், கடற்கரைக்கும், நதி, ஏரி முதலிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லலாம். இப்படிச் செல்லும்போது புதிய தாவரங்கள், பிராணிகள் முதலியவற்றைத் தெரிந்து கொள்வார்கள். பிள்ளைகளை அங்கு அழைத்துச் செல்லுமுன் எந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டுமென்றும் எவ்விதம் கவனிக்கவேண்டுமென்றும் உபாத்தியாயர் முன்னாலேயே சொல்லவேண்டியது அவசியம். உல்லாசப் பிரயாணம் முடிந்தபின் பிள்ளைகள் என்னென்ன விஷயங்களை அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி வகுப்பில் பேசவேண்டும். விஷயங்களைப்பற்றிப் பிள்ளைகளை விவரமாகச் சொல்லச்செய்யவேண்டும். மேல்வகுப்பு மாணவர்களாயின் வியாசங்கள் எழுதும்படிச் செய்யலாம்.

# ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எண் இட வேலை

(எஸ். ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை)

## எண் இட வேலையின் அவசியம்.

1. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.
2. எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்ணென்ப வாழு முயிர்க்கு.

இவைகளிலிருந்து மனித தேகத்திற்கு இரண்டு விழிகள் எப்படி இன்றியமையாதவையோ அம்மாதிரியே உலக வாழ்க்கைக்கு எண் எழுத்து என்பன அவசியமானவை. பாஷையினும் கணக்கு அவசியமென்று கூட நினைக்கக்கூடும். எழுதப்படிக்கத் • தெரியாதவன்கூடத் தனது ஜீவியத்திற்காகச் சிறு கணக்குகளைச் செய்யத்தெரிந்து கொள்கிறான். கடைக்குச்சென்று சாமான்கள் வாங்கவும், தனது கூலியைப் பெறவும் கணக்குத் தெரிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவனது கணக்குகளெல்லாம் கூடிய வரையில் வாய்க் கணக்கே. கைமாற்றாகப் பணம் கொடுத்து வாங்கும் போதும் பஸ், ரயில் இவைகளில் ஏறிச் செல்ல டிக்கட்டு வாங்கும்போதும் தனக்குத் தெரியா விட்டாலும் பிறர் உதவியை நாடியாவது சரியான கணக்கைத் தெரிந்து கொள்ள அவசியம் ஏற்படுகிறது. சிற்சில பெரிய சந்தர்ப்பங்களில் சுமாராக இவ்வளவு தூரம் இருக்கும், இவ்வளவு ஜனங்கள் இருப்பார்கள், இவ்வளவு செலவு பிடிக்கும் என்று சொல்லும்படியான சக்தியை நாளடைவில் பழக்கத்தின் மூலமாகவும், அனுபவத்தின் மூலமாகவும் அடைகிறான். இவை யெல்லாம் நமக்குத் தெரிந்த விஷயம்.

## கண் கண்ட காட்சி.

இது இவ்வாறு இருக்க நான் கண்ட ஒரு காக்ஷியைச்சொல்ல விரும்புகிறேன். எல்லா நகரினும் முதன்மையாயும் தலைநகராயும் இருக்கின்ற சென்னைமா நகரில் ஏதோ ஓர் இடத்தில் நான் போய்க்கொண்டிருந்தேன். நல்ல கோடைக்காலம், ஜூன்மாதம். சூரிய உஷ்ணம் தகிக்கும் நாள்; பகல் 2 மணியிருக்கும். ஒரு கொட்டகையில் அநேகம் சிறுவர் கூடியிருந்தனர். அதைக் கண்டு பள்ளிக்கூடம் என்று அறிந்து சற்று வாசலில் நின்றேன். ஒரு சிறுவன், கொட்டகைக்கு வெளியே பெருக்கல் செய்து

```
745321 ×
   427
```



கொண்டிருந்தான். உள்ளே யிருக்கும் வயது வந்த பிள்ளைகளுக்குக் கப்பட்ட கணக்குகள் வருமாறு:—

பா-ம-வீ-பலம்

1. கற்கண்டு வீசை ரூ. 0—9—10 வீதம் 3—2—1—20 கற்கண்டு என்ன விலை?

வ-மா -நாள்

2. நூற்றுக்கு ரூ. 0-14-0 வட்டி வீதம் ரூ. 1,700-க்கு 5-˜-15-க்கு வட்டி என்ன ஆகும்?

வ—மா—நாள்

3. மாஸம் 1-க்கு ரூ. 117-12-6 வீதம் 5—7 —15 என்ன சம்பளம்?

வாசற் கதவண்டை ஒரு சிலேட்டுப் பலகையின்மீது பின்வருமாறு எழுதியிருந்தது. "இரண்டு மாதம் வீவில் ஆடுகிற பிள்ளைகளை இவ்விடத்தில் விட்டால் ஆடாமலும் வாசிப்பை மறக்காமலும் வைக்கத் தயார்." உட் கருத்து என்னவோ குழந்தைகள் நன்றாக இருக்கவேண்டுமென்பது தான். இதைக் கண்டதும் எனது மனதிற்கு ஒன்று ஞாபகம் வந்தது. மணி முடிச்சுகளாகப் பத்து முடிச்சுகள் போட்டுவிட்டு அவற்றை அவிழ்க்கிறவன் தான் மணிப்பையன் என்று சொல்லுவது உண்டு. எல்லாரும் அம்மாதிரி மணிகளாக இருக்கமுடியுமோ என்று சந்தேகந்தான். இன்னும் இரண்டு முடிச்சுகள் சேர்த்துப்போட்டுஒரு டஜன் முடிச்சுகளாகப் போடக்கூடாதா என்று நினைக்கிறேன். வடிக்கட்டின சமத்து என்று சொல்லலாமே.

## தற்கால கணித போதனை.

(1) (a) கோடி, பத்துகோடி வரையில் எண்ணும் எழுத்தாலும் எழுதத் தெரிந்துகொள்ளுதல்.

(b) ஆங்கில முறையிலும் மிலியன்களை எண்ணும் எழுத்தாலும் எழுதத்தெரிந்து கொள்ளுதல்.

(2) நூற்றுக் கணக்கான
பவுன், ஷிலிங், பென்ச், பார்த்திங்,—பார்த்திங் ஆக்கு.
பார்த்திங்கை பவுனுக்கு.

(3) நூற்றுக்கணக்கான
மை—பர்—செ—அ—அங் அங்குலமாக்கு.
அங்குலங்களை மைலாக்கு.

(4) நூற்றுக்கணக்கான
கிரிசை—பரை—மர—படி—ஆழா ஆழாக்கு ஆக்கு.
ஆழாக்குகளை கிரிசையாக்கு.

(5) நூற்றுக்கணக்கான

வருஷ—மாஸம்—வா—நாள்—மணி—நிமி—செக்கண்ட்

செக்கண்ட் ஆக்கு.

செக்கண்ட் வருஷம், மாஸம் ஆக்கு

(6) நூற்றுக்கணக்கான

டன். அந்தர் அவுன்ஸ் ஆக்கு.

(7) காரண எண்களால் பெருக்கல்

(8) காரண எண்களால் வகுத்தல்

(நூற்றுக்கணக்கு என்பது சில சமயம் ஆயிரக்கணக்கும் ஆகும்)

(7) கோச்சு வண்டிகளின் முன் சக்கரம், பின் சக்கரம் இவைகளில் பலவிதக் கணக்குகள்.

(9) லாப நஷ்டம்

குதிரைகள் வாங்கி வருகிறவர்; வழியில் 2 குதிரைகள் இறந்துவிடும் (ஐயோ பாவம்! போகும்பொழுது அபசகுனம் இனிமேல் குதிரை வியாபாரிகளுக்கு இம்மாதிரி சங்கடங்கள் நேரிடக்கூடாது என்று பிரார்த்திப்போமாக!)

(10) $\frac{1}{83}$, $\frac{7}{81}$, $\frac{17}{147}$ இம்மாதிரி பின்னங்களில் சதுர்வித உபாயங்கள்.

(11) பண்டமாற்றல் :-நாணயம் ஏராளமாக வழங்கிவருகிற இக்காலத்தில் பெரிய வியாபாரிகளுக்கு இம்மாதிரி சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றன போலும்!

(12) உத்தமப் பொது அளவு (G. C. M.)

(13) அதமப் பொது மடங்கு (L. C. M.)

(14) ஸ்கோர் முதலிய அளவைகள்.

(15) வகுக்கப்படும் எண், வகுக்கும் எண், ஈவு, மிச்சம் இவைகளுக்குச் சரியான வேறு பதங்களும் அவைகளுக்கு உள்ள சம்பந்தங்களும்.

தினசரி சம்பவங்களும் மேலே சொல்லப்பட்ட அனுஷ்டானமும்.

பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளைப் படிக்க அனுப்பும் ஒவ்வொரு பெற்றோரும் என்ன எதிர் பார்க்கின்றனர்? தமது பிள்ளையின் கணக்கு ஜீவியத்திற்கு உபயோகப்படவேண்டும் என்றே கருதுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் எந்தத் தொழிலைச் செய்துவந்த போதிலும் முதன் முதலில் குடும்



பத்தைக் காப்பாற்றும் குடித்தனக்காரனாகவே இருக்கிறான். உண்ண உணவும், உடுக்க உடையும் தங்க நிழலும் இருந்தாற்போதும் என்பதே அவனது நோக்கம். குடித்தனக்காரன் எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் கணித ஞானத்தை உபயோகப்படுத்த நேரிடுகிறது என்று ஆராய்ந்து பார்த்ததில் பின் கண்ட பதினாறு வகைகள் எனக்குப் புலனாயின.

1. ஆகாரம்
2. உடுப்பு
3. பண்ட பாத்திரங்கள்
4. சுகாதாரம்
5. வருஷாந்திர சம்பவங்கள்
6. மாதாந்தரப் பண்டிகைகள்
7. குழந்தைகளின் படிப்பு
8. கோயில் உற்சவங்கள்
9. பிரயாணம், யாத்திரை
10. சமாசாரப் போக்குவரத்து
11. வீடு கட்டுதல்
12. தோட்டம், நிலம்
13. ஆடுமாடு
14. பண வரவு, செலவு
15. பொழுது போக்கு.
16. சமூகத்தில் ஒரு அங்கத்தினனும் வரி செலுத்துவோனுமாக இருத்தல்

விரிவாய்ச் சொல்லப்பட்ட தினசரி சந்தர்ப்பங்களில் சற்று முன் கூறப்பட்ட பாடங்களின் அவசியம் எவ்வளவு தூரம் பொருந்தும் என்று பார்ப்போம். லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் நாம் உபயோகித்து வருகிறோமா? பவுன், ஷிலிங், பென்சிலேயே நமது நாணயங்களை வழங்கி வருகிறோமா? எந்தச் சந்தர்ப்பத்தில் மைல்களை அங்குலமாக்கவும் வருஷங்களைச் செகண்டு ஆக்குகிறோம்? வண்டிச் சக்கரம் சுழல்வதைப்பற்றி வண்டிக்காரர்களும் வண்டி ஓட்டுகிறவர்களும் நினைப்பதில்லை. இதே கேள்விகளை யான் ஒரு கூட்டத்தில் கேட்டேன். எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். ஒரு உபாத்தியாயினி மாத்திரம் பள்ளிக்கூடத்தில், மாத்திரம் உபயோகிக்கிறோம் என்ற உண்மையை கூறி உட்கார்ந்தனள். நான் இவற்றைப்பற்றிப் பல தரம் யோசித்தேன். இவைகள் தினசரி சம்பவங்களுக்கு ஏற்றதாகவில்லை என்றே கண்டேன். ஒருக்கால் சில பேருடைய அபிப்பிராயம் வேறுவிதமாகவும் இருக்கலாம்.

பழமொழிகள் பொய்க்கவில்லை.

இவ்வளவு அரும்பாடுபட்டும் நம்மீது வீண் பழி ஒன்று சுமத்தப்படுகிறது. தினசரி அக்கூப்பாடு ஓங்கிக்கொண்டே இருக்கிறது. இதிலிருந்து வெளிவந்து நாமும் பிரயோஜனமுள்ள பாடங்களையே சொல்லிக்கொடுக்கவேண்டுமென்ற அவா உண்டாகிறது. "பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது" 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்' என்ற பழமொழி

களை நம்மிடம் சொல்லிக்காட்டுகிறார்கள். நல்லது செய்தும் பொல்லாப்பு. நமது ஜீவியத்தில் ஒவ்வொரு பகுதியிலும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்க நாம் மாத்திரம் ஒரே வழியில் சென்று கொண்டிருப்பது நியாயமா? நாமும் சமூகம் முன்னேற்றத்திற்கு ஏற்ற அஸ்திவாரத்தை நாட்டவேண்டாமா? சிலரை யான் இதற்கு ஏற்ற காரணங்கள் என்னவென்று கேட்டேன். தற்கால விஷயங்கள், முறைகள் இவைகளுக்குத் தக்க நூல்கள் இல்லாமை என்றார்கள். தற்காலம் எழுதிவரும் நூலாசிரியர்களை விசாரிக்கலானேன். ஒருவர் என்னிஷ்டப்படி விட்டால் இந்நூற்றுக்கு அறுபது பங்கு யான் எழுத மாட்டேன் என்றார். மற்றொருவர் “இதைப்பற்றி சிந்திக்கவேயில்லை! எல்லோரும் போகிறபடி போவோம். ஆயினும் நீங்கள் சொல்லுவதுதான் சரி” என ஒப்புக்கொண்டனர். மற்றொரு சிநேகிதர் “நீங்கள் சொல்லுகிறபடி விஷயங்களைச் சேகரிக்கவே வெகுநாள் பிடிக்கும். மேலே சொன்னபடி கணக்குகள் கொடுப்பது வெகு சுலபம். நமக்கு அதில் சிரமமேயில்லை’ என்றார். மேலும், சிலேட்டுக் கணக்கு, நோட்டுப் புஸ்தக் கணக்குகளில் நீண்டகாலம் செல வழிப்பதே தக்க பயனைத்தரும் என்பார் சிலர். மற்றும் சிலர் “தற்போதுள்ள அனுஷ்டானம் மேல் வகுப்புக் கணக்குகளுக்கு இன்றியமையாதவை. அவை தக்க பயிற்சி அளிக்கின்றன” என்றார்கள். தற்காலத்திற்குப் பிரயோஜனப்படவேண்டும். மனப் பயிற்சியும் தரவேண்டும். மேல்படிப்பிற்கும் சாதகமாக இருக்கும்படி நமது முறைகளை மாற்றிக்கொள்ளமுடியும் என்பதே எனது பூர்ணமான நம்பிக்கை. உலகமே மாயை; இந்தமாயையில் எதைச் சொல்லிக்கொடுத்தால் என்ன என்பது முற்றிய வேதாந்தம். மாயமாயிருப்பினும் தினசரிக் கடமைகளைச் செய்யப்போதுமான ஞானம் அவசியம். ஆதலால் நாம் மற்றும் ஆராய்ச்சி செய்து பார்ப்பது நலம்.

### மறந்துபோன விஷயங்கள் இரண்டு.

சற்று நிதானிப்போம். நாம் யாருக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறோம்? எதற்காகப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறோம்? அவர்களது தேக மன வளர்ச்சி எப்படியிருக்கிறது? முன் படிப்பிற்கும் இப்பொழுதிருக்கும் படிப்பிற்கும் யாது வித்தியாசம் உளது? என்பவைகளைப்பற்றிக் கவனிக்கலாம். முன் காலத்தில் குருவை நாடிப் பெற்றோர்களும் குழந்தைகளும் வந்தனர். படிப்பாளிகளே படிப்பில் ஆர்வம் கொண்டனர். பெரும்பாலார் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளுவதில் எண்ணங்கொள்ளவில்லை. தற்காலத்திலோ குரு குழந்தைகளையும் பெற்றோர்களையும் நாடிச்சென்று, பள்ளிக்கு அழைத்துவந்து கல்வி கற்றுக்கொடுக்கும் காலமாயிருக்கிறது. பொதுவாகச் சொல்லுமிடத்து எல்லா மனிதர்களுக்கும் எண், எழுத்து வாசனையை உணரச்செய்ய வேண்டியிருப்பதில் நாம் அவர்களுக்கு வழிகாட்டி, தோழன், வேதாந்தி இந்தப் பாவனைகளில் இருந்து வேலைசெய்ய நேரிடுகிறது. தற்கால நடவடிக்கைகளுக்கு அனுகூலமாயிருப்பதே படிப்பின் முதல் பிரயோஜனமென்று முதன்மையாகக் கருதப்படுகிறது.



புத்தியை விசாலித்தல் சமூக வாழ்க்கைக்கு ஏற்றபடி செய்தல் என்பவை இரண்டாம் பக்ஷம். எல்லாக் குழந்தைகளும் ஒரே வயது, குணம், பலம் போஷணையுடன் கூடினவர்களாயிருப்பது அசாத்தியமானது. படிப்பில்லாத குடும்பங்களிலிருந்து வருகிறவர்களின் தொகை அதிகமாகிக்கொண்டேவருகிறது. ஆகவே காலபேத இயல்பு, குழந்தைகளின் இயற்கை இவ்விரண்டையும் நாம் தீவிரமாகக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இவற்றைப்பற்றி நாம் வேறொரு சமயம் விரிவாகப் பிரஸ்தாபிக்க நேரிடினும் இவற்றைப்பற்றிக் கணித பாட சம்பந்தமான விஷயங்களைச் சிந்திப்பது நலம்.

### கணித சாஸ்திரம் ஒரு உண்மையை விளக்குகிறது.

கணிதம் என்றாலே ஒழுங்கு, நேர்மை எனப் புலப்படுகிறது. $1+1=2$: எந்நாளும் எச்சமயமும் இது ஒரு உண்மையாக விருக்கிறது. கொஞ்சமேனும் ஏற்றத்தாழ்வே கிடையாது. கணக்கு கணக்குதான்; கணக்கு எப்படி உண்மையை விளக்குகிறதோ அதுபோலவே நாம் உண்மையான கணக்குகளையே தேடுதல் வேண்டும். அவைகளே ஜீவனத்திற்கு ஏற்றதாகும். இதை உணர்ந்து நான், கல்வித்துறைகளில் கீர்த்தி பெற்ற இங்கிலாந்து அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலுள்ள குழந்தைகளுக்கேற்ற கணித நூல்களை வாங்கிப் பார்வையிட்டேன். நான் இதுவரையில் கூறி வந்த உண்மைகளை அங்குக் கண்டேன். எனக்குப் பரம சந்தோஷம் உண்டாயிற்று. அவ்வாறே நமது நாட்டுக் குழந்தைகளும் கணிதம் கற்கவேண்டுமென்று தோன்றிற்று. அப்புஸ்தகங்களில் நீண்ட எண்கள் வாய்ந்த யோசனைக் கணக்குகளும் கிடையா? ரூபாய் அணாக்களைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் இல்லை. ஆரம்ப மூன்று வகுப்புகளில் சதுரங்கங்களைப்பற்றியே பல அப்பியாசங்கள் காணப்பட்டன. தினசரிப் பழக்கத்தில் எண்கள் வஸ்துக்களையே குறிக்கின்றன. கணித சாஸ்திரத்தில் பழகுவதற்கு எண்களில் தக்க மனப்பயிற்சி கொடுக்கத் தக்கவாறு பூர்ணமான பயிற்சிகள் காணப்பட்டன. ஆங்காங்குப் படங்களும் சித்திரங்களும் புஸ்தகத்தை அழகு படுத்தின. கணித சம்பந்தமான நூதன பதங்கள் அர்த்தம்விளங்கும்படி விளக்கப்பட்டிருந்தன. முக்கியமாக அமெரிக்கா தேசத்தில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு பிரத்தியேக புத்தகம் இருப்பதாகவும் தெரிய வந்தது. பல ஜில்லாக்களிலுள்ள புஸ்தகங்களைப் பார்க்க எல்லாம் ஒருவித முறையையே அனுஷ்டிப்பதாகவும் விளங்கிற்று. சதுரங்களில் போதுமான பயிற்சியும், சுலபமான வாய்க் கணக்கு அப்பியாசங்களுமே அதிகம் காணப்பட்டன.

### தற்கால அனுஷ்டானமும் நமக்கு ஏற்படவேண்டிய பரந்த நோக்கமும்:

தற்பொழுது உள்ள திட்டம் பழமையுமல்ல, நூதனமுமல்ல. இது ஒரு திரிசங்கு சுவர்க்கம். பழைய வழியில், மனக்கணக்கு அப்பியாசம்,

எண்சுவடி, வாய்பாடு, சதுரங்களில் அப்பியாசம் இவைகளே முக்கியமானவை. தற்கால அனுஷ்டானத்தைப்பற்றி முந்தியே குறிப்பிட்டுள்ளேன். இனி இருக்கவேண்டிய நிலைமைக்கும் சில குறிப்புகளைத் தெரிவித்திருக்கிறேன். ஒன்றுக்கொன்று மலையும் மடுவும்போல் இருக்கிறது. தற்போதுள்ள முறைகளைப்பற்றிக் குறை சொல்லாமல் அவைகளை மேன்மைபடுத்துவதில் நாம் சிற்சில விஷயங்களை ஞாபகம் வைக்கவேண்டும். நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டிய விஷயங்கள் பின்வருமாறு.

1. எவ்வளவு விஷயங்கள் தெரிந்திருந்தால் ஒரு பையன் ஆரம்பப் பள்ளிக்கூடத்தை விட்டுத் தனது பொறுப்பை வகிக்கமுடியும்? இவைகளைப்பற்றிப் பெற்றோர்கள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள்?

2. தற்போதுள்ள குழந்தைகளின் கணித அறிவு எவ்வளவு தூரம் உள்ளது என்பதைப்பற்றின சில பரீக்ஷைகள்.

3. குழந்தைகளின் இயற்கை, மனவளர்ச்சி இவைகளுக்கு ஏற்ற படி முறை மாறுதல்கள்.

4. காலபேத இயல்பிற்குத் தக்கபடி வாழ்க்கையில் பிரயோஜனப் படக்கூடியவைகள்.

5. பிள்ளைகள் எந்தச் சந்தர்ப்பங்களில் கஷ்டப்படுகிறார்கள் கஷ்டத்தை எவ்விதப் பயிற்சி கொடுத்துப் போக்கலாம்? இதைப் பற்றின யோஜனை.

இப்படி யோஜிப்போமானால் இப்பொழுது கணக்குப் பாடத்திற்குப் பிள்ளைகள் கொண்டிருக்கிற வெறுப்பையும் கசப்பையும் போக்கலாம். ஆரம்பத்திலேயே இவைகளைப்பற்றி ஆராய்ந்தால் மேல் வகுப்பு உபாத்தியாயர்கள் நம்மைப் பற்றிக் குறை சொல்ல இடமிராது. பத்தாவது வகுப்புப் பரீக்ஷை அதிகாரிகள் எவ்வளவோ பிள்ளைகள் சதுரங்கங்களில் ஏராளமான பிழைகளைச் செய்து தவறிவிடுகிறார்கள் என்று சொல்லுவதை நாம் கேட்டும் இருக்கிறோம். சில அறிக்கைகளிலும் படித்தும் இருக்கிறோம். இவைகளைப்பற்றி அடுத்த மாதத்தில் தீவிரமாக விசாரிப்போம்.

# விளையாட்டிலும் படிப்பு

## குழந்தைகளின் ஒழிவு நேரமும் உல்லாசமான பொழுது போக்கும்.

### 1. பலவித ஸ்டாம்புகளைச் சேகரம் செய்தல்.

குழந்தைகளே,

நீங்கள், உங்களுடைய ஒழிவு நேரங்களில் விளையாட்டாகவும் சந்தோஷத்துடனும் செய்யக்கூடிய சில விளையாட்டு வேலைகளைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இளம் பிராயத்தில் விளையாட்டும் வேண்டும், படிப்பும் வேண்டும். இவ்விளையாட்டுத் தொழில் மூலமாகவே நாம் எவ்வளவோ அற்புதமான விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம். அம்மாதிரி விளையாட்டுத் தொழில்களை நாம் மிகவும் ஆசையுடனும் ஊக்கத்துடனும் எடுத்துக்கொள்ளவேண்டும். பல அபூர்வமான வஸ்துக்களைச் சேகரம் செய்வது இன்பம் தரக்கூடிய ஒரு விளையாட்டுத் தொழில் ஆகும்.

**ஸ்டாம்பு சேகரம் செய்தல்.**

நம்முடைய தேசத்திலுள்ள ஸ்டாம்புகளில் எல்லாம் நமது சக்கரவர்த்தியின் உருவம் காணப்படுகின்றன. மற்றும் நானுவித தேச ஸ்டாம்பு



களைப் பார்ப்போம். அவைகளில் அந்தந்தத்தேச அரசர் படம் மாத்திரம் அல்ல, மற்றும் சில விநோதங்களையும் பார்க்கலாம். கீழேயுள்ள ஸ்டாம்புகளைப் பாருங்கள். ஸ்டாம்புகளைக் கொண்டே இங்கு ஒரு மிருகக் காக்ஷி சாலை வைக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியா தேசத்துக் "கங்காரு" என்னும் பிராணியையும் மலேயா நாட்டுக்காடுகளில் உள்ள புலியையும் மேலேயுள்ள ஸ்டாம்புகளில் காணலாம்.

2. கீழேயுள்ள ஸ்டாம்புப் படங்களைப் பாருங்கள்.




இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தபால் ஆபீஸ் வழியாக அனுப்பும் பார்சலுக்கு ஒட்டக்கூடிய ஸ்டாம்புகளைக் காட்டுகிறது. அந்த ஸ்டாம்பு மூலமாக நாம் தெரிந்துகொள்ளுவது என்னவென்றால் அந்தப் பார்சல் எப்படித் தூக்கிச் செல்லப்படும் என்பதுதான்.

(a) தபால் குமாஸ்தா எடுத்துச் செல்லக்கூடிய பார்சல்.
(b) குதிரை வண்டி மூலமாக நாட்டுப் புறங்களுக்குச் செல்லும் பார்சல்.
(c) ரயில் மூலமாகச் செல்லுபவை.
(d) நீராவிக் கப்பல் மூலமாகச் செல்லுபவை.
(e) மோட்டார் மூலமாகச் செல்லுபவை
(f) ஆகாய விமானம் மூலமாகச் செல்லுபவை.

3. நமது இந்தியா தேசத்திலும் தற்காலத்தில் ஆகாய விமானம் மூலமாகத் தபால்செல்லுகிறது. அத்தபாலில் ஒட்டியிருக்கும் ஒரு ஸ்டாம்பின் படம் இதோ இருக்கிறது.






4. 1931-ம் வருஷத்தில் புது டில்லி பட்டணம் கட்டி முடிந்த காலத்தில் அடியிற் கண்ட ஸ்டாம்புகள் வெளியாயின. அவைகளில் சக்கரவர்த்தியின் உருவத்துடன் புது டில்லியில் கட்டப்பட்ட நூதனக் கட்டடங்களையும் பார்க்கலாம். இதே மாதிரி நமது இந்தியா தேசத்திலுள்ள ஜெய்ப்பூர் சமஸ்தானத்திலும் அவ்வூர் அரசர் பட்டத்திற்கு வந்த காலத்தில் மேலே காட்டிய மாதிரிப் படங்கள் அமைக்கப்பட்ட ஸ்டாம்புகள் வெளியிடப்பட்டன.



5. இவை 1935-ம் வருஷம் நடந்தேறின நமது மன்னரின் வெள்ளி விழாக்கொண்டாட்டத்தின்போது வெளியிடப்பட்ட ஸ்டாம்புகள் ஆகும்.

6. ஸ்டாம்பு சேர்க்கிறவர்களுக்கு கீழ்க் கண்ட குறிப்புக்கள் உதவியாயிருக்கலாம்.

(a) ஸ்டாம்பு சேகரம் செய்கிறதைப் பலருக்குச் சொல்லி அவர்களையும் ஸ்டாம்பு சேகரம் செய்யச் சொல்.

(b) உன்னிடத்தில் அதிகமாக இருக்கிறதை வேறொருவருக்குக் கொடு. உன்னிடமில்லாதவை அவர்களிடம் அதிகமாக விருந்தால் அவற்றை வாங்கிக்கொள். வேறு தேசக் குழந்தைகளுடன் கூட நீ சினேகம் செய்துகொள்ளலாம்.

(c) ஸ்டாம்புகளைத் தனியாக வரிசைப்பட தேசம், விலைக்குத்தக்கபடி ஒட்டு.



(d) ஸ்டாம்பின் பின் புறம் சுத்தமாக விருக்கவேண்டும். முன் புறத்து வர்ணம் கெட்டு விடக்கூடாது. பின் புறத்தைச் சுத்தமாக்க ஸ்டாம்பின் பின் புறத்தை தண்ணீரின்மீது மிதக்கவிடு. சற்று ஊறினதும் அங்கு ஒட்டிக்கொண்டிருக்கும் காகிதத் துண்டுகளை எடுத்துவிடு.

(e) ஒட்டும் விதம்:—பிறகு ஒரு துண்டுக் காகிதம் (1 அங்குல நீளம்) (அரை அங்குல அகலம்) எடுத்துக்கொள். அதை இரண்டாக மடி. ஒரு பாதியை ஸ்டாம்பின் பின் புறத்தில் ஒட்டு. மற்ற பாதியை ஸ்டாம்பு நோட்டுப் புஸ்தகத்தில் ஒட்டு. (ஸ்டாம்பு ஒட்டும் நோட்டுகளும், ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு வேண்டிய துண்டுக் காகிதங்களும் விலைக்குக் கிடைக்கின்றன.)

(f) மிகவும் பழமையான ஸ்டாம்பை ஜாக்கிரதையாய் வை. ஏதோ ஒரு காலத்தில் அதற்கு கிராக்கி உண்டாகும்.

தெரிந்துகொள்ள வேண்டியவை.

இம்மாதிரி ஸ்டாம்புகள் சேகரம் செய்வதிலிருந்து பல தேசங்களில் ஸ்டாம்புகள் எப்படி அழகாக வெளியிடப்படுகின்றன என்பதைக் கவனிக்கலாம். அத்தேசத்துத் தலைவர், முக்கியமான கட்டடம், மிருகம், பக்ஷி முதலிய அடையாளங்களையும் அறிந்துகொள்வதுடன், நாளடைவில் அவற்றின் விலைகளையும் நீ தெரிந்துகொள்வாய்.

இதனால் லாபம் அடையவேண்டும் என்று நினைக்கக்கூடாது. எவ்வளவோ பெரியோர்கள் இவ்விஷயத்தில் அதிக ஆசையுள்ளவர்கள் எனத் தெரிகிறது. காலஞ்சென்ற நமது சக்கரவர்த்தியான ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு ஸ்டாம்பு சேகரம் செய்வதில் அதிகப்பிரியம் என்று சில பத்திரிகைகளில் எழுதியிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

# நமது மன்னர்

புது அரசர் மாகஷிமை தங்கிய எட்டாவது எட்வர்ட் அவர்களை நாமறிவோம். நாற்பத்தோராண்டுகள் கடந்தன எனினும் அவர் இளமையின் செவ்வியை இனிதுறக் காத்து வருகின்றார்; தம் அநுபவமுயற்சியால் முதிர்ந்த அறிவும் பெற்றுத் திகழ்கின்றார். காட்சிப் பொருள்களாலும், உதாரணங்களாலும் தேச சஞ்சாரத்தாலும் முதிர்ந்த அறிவு வாய்ந்தவராய் இளமைச் செவ்வியழியாத நெஞ்சத்தராய் இவர் போன்ற அரசர் ஒருவர் முன்பு இருந்ததில்லை.

இவர் கடல் பல கடந்து சென்றுள்ளார்; கண்டங்கள் பலவற்றையும் கண்டுள்ளார்; நாற்பது தேயங்களைத் தம் வழியாகவே தாம் அறிந்துள்ளார்; விண்ணிற்செல்லும் விமானத்தில் 300,000 மைல்கள் பறந்துள்ளார். பிரான்சு தேச பாஷையில் சிறந்தஞானம் வாய்க்கப்பெற்றிருப்பதோடு ஸ்பெயின் பாஷையிலும், ஜெர்மன் பாஷையிலும் இவர் சிறந்த அறிவு படைத்துள்ளார். மற்றும் இவர்க்கு இத்தாலியன் பாஷையிலும், டச்சு பாஷையிலும், வேல்ஸ் பாஷையிலும் எழுதவும் படிக்கவும் பேசவும் தெரியும். ஆப்பிரிக்கா தேசத்தவர்களின் மொழிகளிலும் இவர்க்குப் பயிற்சியுண்டென்பர்.

பிறந்த நாள் தொடங்கி அரச குடும்பத்திற்கு இவர் ஒப்பருமைச்செல்வச் செம்மணி யெனத் திகழ்ந்தார். இவர் கெடுதலுறாது திகழ்ந்தார். ஓஸ்பார்ன், டார்ட்மவுத் என்னும் இடங்களில் கலைக்கழகங்களில் அரச குமாரர் என்னும் செருக்கின்றி மற்றப் பிள்ளைகளைப் போலவே நடந்து கொண்டார். தாம் அரச பதவி எய்துதற்குரிய தகுதியும் முறைமையும் உடையவர் என்பதை அறியாமலே தம் இளம் பருவத்தில் தாம் ஒரு வைத்திய நிபுணர் ஆதற்கு விரும்பினார். பின் இவர், தம் விதி நின்ற நெறியை உணர்ந்ததும், "நான் அரசனானால் இள நாய்க்குட்டிகளின் வாலைத் துண்டித்தலையும், குதிரைகளுக்குக் கடிவாள மிடுதலையும் நீக்குவேன்; மற்றும் உலகில் நிகழ்வுறத்தக்க பாவச்செயல்களை நீக்குவேன்' என்று கூறினார்.

இவர் பின் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் மாணவராய்த் திகழ்ந்த பொழுது கிரிக்கட் ஆடுவதும், காலுதைப் பந்து ஆடுவதும், படகில் செல்வதும், படகுப் பந்தயத்தில் ஈடுபடுதலும், பைசைக்கிளில் ஊரெல்லாம் சுற்றி வருதலும் உண்டு. அரச குமாரர் என்னும் செருக்கின்மையால் ஒவ்வொரு நற்குண மாணவரும் இவருக்கு நண்பராயினர்.

பெரும் போர் வந்தது. கிரனடியர் கார்டுஸில் பயின் முறையில் புகுந்து தேர்ந்து போர் முனையில் முன்னணியில் நிற்க இவர் விரும்பினார். இவர் பிடிவாதமாகப் போர்க்கள முன்னணியில் நிற்க விரும்பியவாறு கார்டுகளுக்குத் தலைவராய் ஒரு படைத் தலைவரின் கீழ்ச்சென்று போர் வீரர்க்குற்றதில் தாமும் பங்கிட்டுக்கொண்டார்.

போர் வீரர் தங்குமிடத்திற்கு அருகில் மறைகுழிகளில் நடைபெறும் மும்முர யுத்தத்தை இவர் தாமே நேரில் சென்று கண்டார். ஒரு சமயம் இவர் சென்ற மோட்டார், இவர் அதனினின்று இறங்கி வந்த சில நிமிஷங்களுக்குள் வெடிகுண்டால் தகர்க்கப்பட்டமையை அறிந்தார். நான்கு வருட காலம் போர் வீரர்களோடு பழகிய இவர் அங்குத்தான் தம் மனிதத் தன்மையின் சிறப்பை யறிந்தார்.

எகிப்து இத்தாலிப் போர் முனைகளை இவர் சென்று கண்டார். 1918ம் வருஷம் மார்ச்சு மாதம் இவர் போர் முனையில் இராக் காலத்தில் ஜெர்மனியாரால் நம் படை வீரர் முறியடிக்கப்பட்டுச் சிதறுண்டபோது, நாடு முழுவதும் தத்தளிக்கும் நிலையில் இவர் மீண்டு போர் முனைக்குச் சென்று வெற்றி பெறும் அளவும் முன்னணியில் நின்றார். இத்தகைய நிலையுற்றார் முன்பு இருந்ததே இல்லை.

பின் இவர் வாழ்க்கை புதுநெறி யுற்றது. இவர் 'ராஜ்ய தூதுவர்' ஆனார்; பல நாடுகளின் ஐக்யபத்தியத்தை நிலைநாட்டும் நல்லெண்ணம் உடையவரானார். முதலில் இவர் கனடா தேச முழுவதும் சுற்றிவந்தார். பின் இவர் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் என்னும் அமெரிக்காவையும் சுற்றி வந்தார். அங்கு ஒரு பத்திரிகை: "புன் முறுவலும், அடக்க முடைமையும், இயற்கை அன்பு காட்டும் முறைமையும், இவரது நீலநிறக் கண்கள் தெரிக்கின்றன. இளைஞர்களைத் தழுவுதலும், கடமையை வெற்றியுடன் செய்து முடித்தலும், இவரது ஆற்றலை யுணர்த்துகின்றன", என்று எழுதியது. விரும்பத் தக்க அணிசெய்யும் இளைஞராகவும், விளையாட்டு விருப்புடைய செம்மலாகவும், அரசியல் தந்திரமுணர்ந்த கலைஞராகவும் நாம் படிக்க வுணரப்பட்ட இவரை அப்பத்திரிகை யாசிரியர் நன்கு அடுத்துப் பழகி விரும்பத்தக்க இவ்வரிய குணங்களைக் கண்டு அறிந்தார். என்பது சீரியதே.

இவர், இருமுறை பனமாகால்வாய் வழியாகப் பிரயாணம் செய்துள்ளார். நியூஸிலெண்டுக்கும் இவர்சென்று வந்துள்ளார். இவர் இரண்டு மாத காலம் ஆஸ்திரேலியா நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்நாட்டு மக்களில் ஒருவர் இவர் இளவரசர் என்று கூறியபொழுது, 'ஆம், நான் இங்கிலாந்தின் அரசன்' என்று கூறினார். அந்நாட்டு மக்கள் இவரை உபசரித்து அனுப்பியபொழுது, 'இளைஞ, மீண்டும் ஒருமுறை உன்னைக்காண விரும்புகின்றோம்' என்று கூறினர்.

இவர் இந்தியாவில் பெரியதோர் சுற்றுப் பிரயாணம் செய்தார்; ஆப்பிரிக்கா தேசத்திற்கு இருமுறை சென்றுள்ளார்; ஒரு சமயம் கிளிமன்-ஜரோவின்மீது பறந்து சென்றார்; காடுகளில் வாழ்ந்த முரட்டுச் சாதியாரிடமும் நட்புப் பூண்டார்; தென் அமெரிக்காவில் பல அதிசயங்களைக் கண்டார்; அங்கு வண்டிஸ் என்னும் மலைமீது பத்தாயிரம் அடி ஏறினார்; பத்தாயிரம் மைல்கள் தூரம் பறந்தார்.



கனடாவில் இடை மகன் போன்று வாழ்ந்தார். இவர் மால்டாவின் முதல் (பார்லிமெண்ட்) நியாயமன்றத்தை நிறுவினார். ஜோனஸ்பர்க்கிற்கு சென்று அங்குக் குருஜர் புதையல் மீது வெண்மலர்த் தொடையலணிவித்தார். நெப்போலியன் புதைக்கப்பட்டுள்ளவிடத்தில் ஓர் ஆலிவ் மரத்தைப் பயிரிட்டார். ஸிஸில்ரோட்ஸ் என்பார் புதையலுக் கருகில் சென்று தம் நன்றியறிதலாகிய கடனை இன்மொழிகளால் தெரிவித்தார். இவர் ஐரோப்பா தேசம் முழுவதும் பறந்து சென்றுள்ளார். இவர் ஆறு ஆகாயவிமானங்களை வைத்துள்ளார். இவரே, 'ஆங்கில அரசர் பறந்து செல்வது' என்னும் நிலையில் தலைமை எய்தினார்.

ஆங்கில மக்களின் ஜீவகாருணியத்தையும் விளையாட்டு விருப்பையும் கொண்ட இவர் எளிய மக்களின் ஏழ்மை நிலையை மறவாது எண்ணி அவர்களுடைய சமூக வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு உழைத்தார். இவர் இங்கிலாந்தில் சென்று காணாத இடமில்லை.

இவர்க்கு நிறைந்த கேள்வி ஞானமும் அநுபவ ஞானமும் உண்டு. இவரைப்போன்ற நிறைந்த கல்வி, கேள்வி ஞானமுடைய வரசர்கள் முன்பு இருந்ததில்லை. ஒப்புமை இல்லாத தேச சஞ்சாரத்தால் எய்திய நல்லறிவும் அனுபவமும், தூய நெஞ்சத்தால் யாவற்றையும் ஏற்று ஆராய்ந்தறியும் பெருந்தகைமையும், பொருந்தியவராய்த் தம் குடிகள் தம்பிடத்தில் நிறைந்த அன்பு காட்டுதலையு முணர்ந்து அரசுபுரியத் தொடங்கியுள்ளார். குடிகள் அவரை மேன்மேலும் நேசித்திடுவர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அவருடைய அடைதற்கரிய அரும் பெருங் குணங்கள் அவரது பெருந்தன்மையை விளக்குகின்றன.

# கல்விச் செய்தியும் குறிப்பும்

போஷக பாடசாலைகளின் (Aided-Schools) உபாத்தியாயர் சம்பளத்தைப்பற்றிக் கொச்சிநாட்டுக் கல்வி இலாகா டைரக்டர் தீர்மான உத்திரவைப் பிறப்பித்துள்ளார். போதனா முறைப் பயிற்சி பெறாத உபாத்தியாயர்களுக்கு 75% வீதமும் போதனா முறைப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களுக்கு 87½% வீதமும் அரசாங்கத்தார் கிராண்டு அளித்துள்ளார்கள். இந்தக் கிராண்டும் கண்டின்ஜன்ஸீ கிராண்டுடன் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கிராண்டு அளித்ததின் கருத்து என்னவெனில் போஷகப் பாடசாலை உபாத்தியாயர்கள், அரசாங்கத்தார் பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களைப்போல முழுத் திருப்தி அடையவேண்டும் என்பதே. இங்ஙனமிருந்தும் மானேஜர்களால் உபாத்தியாயர்களுக்குத் தக்கவாறு முழுச் சம்பளமும், காலத்தில் கொடுக்கப்படுவதும் இல்லை என்று இடைவிடாது மனுக்களைப் பெறுகிறதாக டைரக்டர் எழுதுகிறார்.

போஷக பாடசாலையின் கிராண்டு விஷயமாக அரசாங்கத்தார் பிறப்பித்த உத்திரவில் கிராண்டு விஷயமான நியதிகளை அமுலுக்குக் கொண்டு வருவதால் அந்நியதிகளில் சிறிது தவறி நடந்தாலும், கல்வி இலாகா அதிகாரிகளின் உத்திரவை மீறினாலும், அரசாங்கத்தார் பொறுக்க மாட்டார்கள் என்றும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வாரென்றும் மானேஜர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மானேஜர்களும் அவர்களால் அமைத்துக்கொள்ளப்படும் உபாத்தியாயர்களும் திருப்தி யுடையவர்களாயிருப்பாராயின் அவர்களுடைய கடமை எளிதில் நிறைவேறிடுமென்று அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்: குறைவான சம்பளத்தைப்பற்றியோ காலத்தில் சம்பளம் கொடாதிருத்தலைப்பற்றியோ சொல்லிக்கொள்ளவரும் உபாத்தியாயர்களுடைய பிரதிநிதிகளை அதிகாரிகள் விசாரித்து தக்க ஏற்பாடு செய்வார்கள். இன்ஸ்பெக்டர்களும் டெப்டி இன்ஸ்பெக்டர்களும் பாடசாலைப் பரிசோதனைக்குச் செல்லுங்கால் உபாத்தியாயர்கள், மானேஜர்களால் சம்பளங்கொடுக்கப்படாமலோ, குறைவாகக்கொடுக்கப்பட்டோ அதனால் துன்புறுகின்றார்களா என்பதைத் தம் முதற் கடமையாகக்கொண்டு பார்க்கவேண்டும். அத்தகைய குறைவு பாடுகள் ஏதேனும் கண்டால் உடனே மானேஜர்களைக் காரணம் வினவுதல் வேண்டும். ஏனெனில் இத்தகைய தவறான முறையை முற்றிலும் கண்டிக்க எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளுமாறு அரசாங்கத்தார் தெளிவான உத்திரவு பிறப்பித்துள்ளனர். ஆதலின் டைரக்டர், போஷகப் பாடசாலை மானேஜர்களைத் தன்னுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறார். இல்லையேல், இத்தகைய குறைவு பாடுகளைக்கொண்ட பாடசாலைகளை முற்றிலும் ஒழிக்கத்தக்க முறைகளைக் கையாளநேரிடும்.



உபாத்தியாயர்களும், சம்பளம் பெறுவதற்கு முன் சம்பளப் பட்டியில் கையெழுத்திடும்போதும், மானேஜர்களுடன் சம்பளத்தைக் குறித்து ஒப்பந்தம் செய்து கொள்ளும்போதும் ஜாக்கிரதையாக விருக்கும்படி எச்சரிக்கப்படுகின்றனர்.

கொச்சி நிருபர் 'இந்து'—26—2—36

ஆரம்பாசிரியர்களின் மகாநாடு.

நாங்குனேரி தாலூகா ஆரம்பாசிரியர்களின் நான்காவது மகாநாடு, நாங்குனேரி உயர்தரப் பள்ளிக்கூடத்தில் மார்ச்சு மீ 1-ந் தேதி யன்று நடந்தது. கனம் M. D. T. குமாரசாமி முதலியார், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் அக்கிராசனம் வகித்தார். Rev. G. T. சேல்வின், M.A., மகாநாட்டைத் திறந்து வைத்தார். அப்பொழுது அவர் ஆரம்ப ஆசிரியர்கள் தற்காலத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதாகவும், அந்நிலையை உயர்த்தாவிடில் ஜன சமூகத்தில் கல்வி மேம்படாதென்றும், ஆரம்பாசிரியர்கள் சம்பளங்கள் மிகவும் குறைவென்றும், அவர்களின்வேலையும் பொறுப்பும் அபாரமா யிருக்கிறதென்றும், ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். ஸ்ரீமான் ஆசீர்வாதம் அவர்கள் ஆசிரியர்களையும் தலைவரையும் வரவேற்றார்' அடிக்கடி ஆசிரியர்களை இடம் விட்டு மாற்றுவது, போஷகம் பாடசாலைகளினருகில் போர்டு பாடசாலைகளை ஸ்தாபனம் பண்ணுவது முதலியவற்றால் போஷக பாடசாலைகள் நஷ்டமடைகின்றதென்றும் கூறினார். கனம் குமாரசாமி முதலியார், தலைமை பிரசங்கத்தில் ஆசிரியர்களின் குறைகளைத் தன்னால் கூடியமட்டில் கவனிப்பதாகவும் ஜன சமூகத்தில் கல்வி அபிவிர்த்தி உண்டுசெய்வது ஆசிரியர்களின் பொறுப்பு என்பதை ஆசிரியர்கள் கவனித்தல் வேண்டும் என்றும் சொன்னார். பிறகு Lt. Col. T. S. சாஸ்திரி I. M. S., கல்வி ஆரோக்கிய பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்.

சென்னை

சென்னைக் கார்ப்பொரேஷன் ஆரம்ப ஆசிரியர்கள் 29—2—36 முதல் 2—3—36 வரை என்னூரில் வருடாந்தர மூகாம் கூடினார்கள். சென்னை மேயர் கனம் அப்துல்ஹமீத்கான் அக்கூட்டத்தை திறந்து வைத்தார். ஜனாப் ஜவாத்ஹுஸேன் சாஹிப் பகதூர் ஆசிரியர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். Miss சைமன், செஞ்சிலுவை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றி விவரித்துப்பேசினார். ஸ்ரீமான் R. T. ஸாவூர், சென்னை கல்வி ஆபீஸர், "புது போதனாமுறையும் தாய் பாஷையும்" என்பதைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஸ்ரீமான் T. V. அப்பர் சுந்தர முதலியார் "கல்வி ஆராய்ச்சி" என்னும் விஷயத்தைக் குறித்து ஒரு பிரசங்கம் செய்தார் பின்னர் ஸ்ரீமான் N. சுப்பிரமணிய அய்யர் இங்கிலாந்திலுள்ள தேச ஆசிரியர்களின் சங்கம் (National Union of Teachers) எவ்வாறு ஆசிரியர்களுக்



162273

காக உதவி செய்வதென்றும், நம் தேசத்தில் தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் கொள்கைகளைப்பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார். ஸ்ரீமதி ஸ்வர்ணம்பாளும் ஸ்ரீமதி நித்யானந்தாவும் ஆசிரியர்களின் கடமையைப் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீமான் சச்சிதானந்தம் பிள்ளை, (கார்ப்பொரேஷன் கல்வி ஆபீஸரும், முகாம் முக்கிய அதிகாரியும்) எல்லாருக்கும் வந்தனமளித்தார்.

சேலம்.

சேலம் முனிசிபல் ஆரம்பப் பள்ளிக்கூட தினம் 1—3—36 அன்று மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் எஸ். வி. ராமமூர்த்தி, ஐ. ஸி. எஸ். சேலம் ஜில்லா கலெக்டர், அக்கிராசனம் வகித்தார். 50 பள்ளிக்கூடங்கள் சேர்ந்து இந்த வருஷாந்திர தினத்தைக் கொண்டாடினார்கள். கோலாட்டம், பாட்டு, ஆட்டம் முடிந்த பிறகு, ஸ்ரீமான ஆர். டி. பால், எம். ஏ., முனிசிபல் கமிஷனர், சேலம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் பற்றியும் சேலத்தில் கட்டாய ஆரம்பப் படிப்பின் முன்னேற்றத்தைப் பற்றியும் ஒரு ரிபோர்டு வாசித்தார். சேலம் முனிஸிபாலிட்டியார் வருஷத்தில் ஒரு லக்ஷ ரூபாயை ஆரம்பக் கல்வியில் செலவிடுவதாகவும், நடந்த வருஷத்தில் 1000 பிள்ளைகள் அதிகமாகப் பள்ளிக்கூடங்களில் இருந்தார்களென்றும் ஸ்ரீமதி பால் ஆரம்பக் கல்வி விஷயத்தில் மிக ஊக்கத்துடன் உதவிபுரிந்தார் என்றும் ரிபோர்டில் கண்டிருந்தது. பிறகு ஸ்ரீமான் எஸ். வி. ராமமூர்த்தி, சேலம் முனிஸிபாலிடியாரையும் கமிஷனரையும் அவர்களின் நல் நோக்கத்தைப் பாராட்டிப் பேசித் தேச முன்னேற்றத்துக்கும் முக்கியம் ஆரம்பக் கல்வியே என்றும் மொழிந்தார். பிறகு ஸ்ரீமதி கிருஷ்ணமூர்த்தி பரிசுகளை குழந்தைகளுக்கு வழங்கினார். டாக்டர் ராஜரத்தினம் சேலம் முனிசிபல் சேர்மன் எல்லோருக்கும் வந்தனோபசாரம் வழங்கினார்.

---

# கட்டாயப் படிப்புச் சட்ட விவரம்

## (1934-ம் வருஷத்து கல்வித் தொகுதியிலிருந்து—Year Book of Education)

| தேசம் | வயது | குறிப்பு |
|---|---|---|
| இங்கிலாந்து | 5—14. | மேலும் உயர்த்த முயற்சி. |
| ஸ்காட்லண்டு | 5—14. | ஷை |
| அயர்லாந்து | 6—14. | |
| யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள மாகாணங்கள் * | 6—18. | சில மாகாணங்களில் வயதெல்லை 18-க்குக் குறைவு. |
| நியூஸீலண்டு | 7—14. | |
| தென்னாப்பிரிகாவிலுள்ள மாகாணங்கள் | 7—15,16 | |
| ஐரிஷ் பிரீஸ்டேட் | 6—14. | |
| ஆஸ்திரேலியாவிலுள்ள மாகாணங்கள் | 6—14. | |
| ஆல்பேனியா | 7—13. | சட்டத்தை அனுஷ்டிப்பதில்லை |
| ஆர்ஜன்டைன் மகாணங்கள் | 6—14. | ஷை |
| ஆஸ்திரியா | 6—14; 14—18.* | (ஒழிவு நேரத்தில்) *14—18 ஜனங்கள் சம்மதத்தின்பேரில் |
| பெல்ஜியம் | 6—14. | |
| பொலிவியா | 6—12. | அனுஷ்டிப்பதில்லை |
| பிரேஸில் | 7—14. | ஷை |
| பல்கேரியா | 7—14. | |
| சிலி | 6—14. | |
| சீனதேசம் | 6—10. | சட்டம் தயாராகி வருகிறது |
| கோஸ்டாரீகா | 7—14. | |
| க்யூபா | 7—13. | |
| ஸெகோஸ்லோவாகியா | 6—14; 14—17* | *14—17 ஒழிவு நேரத்தில் |
| டென்மார்க்கு | 7—14. | |
| ஈக்வேடார் | 6—12. | அனுஷ்டிப்பதில்லை |
| எஸ்டோனியா | 7—12; 12—16.* | 12—16 ஒழிவு நேரத்தில் |

| தேசம் | வயது | குறிப்பு |
| --- | --- | --- |
| பின்லாந்து | 7—13;<br>13—15.* | *15 ஒழிவு நேரத்தில். |
| பிரான்சு | 6—13;<br>15—18.* | *15—18. ஒழிவு நேரத்தில். |
| ஜெர்மனி மாகாணங்களில் | 6—14;<br>*18 வரையில் | *18 ஒழிவு நேரத்தில். |
| க்ரீஸ் | 6—12. | |
| கௌதமாலா | 7—14. | அநுஷ்டிப்பதில்லை. |
| ஹைடி | 7—14. | ஷை |
| ஹான்டூராஸ் | 7—15. | ஷை |
| ஹங்கரி | 6—12;<br>*12—15. | *12—15 ஒழிவு நேரத்தில். |
| ஐஸ்லாண்டு | 7—14;* | *10—14 நாட்டுப் புறங்களில். |
| இதாலி | 6—14. | 11 வயது வரையில் கண்டிப்பாய் அநுஷ்டித்தல். |
| ஜபான் | 6—12,14 | கட்டாயமாக ஆறு வருஷம். |
| ஜூகோஸ்லேவியா | 7—11. | |
| லக்ஸம்பர்க் | 6—13. | |
| மெக்ஸிகோ | 6—12. | அநுஷ்டிப்பதில்லை. |
| நெதர்லாண்ட்ஸ் | 7—13. | |
| நார்வே | 7—14. | |
| ஸ்பெயின் | 6—12. | |
| ஸ்வீடன் | 7—14;<br>*14—16. | *14—16 ஒழிவு நேரத்தில். |
| ஸ்விட்ஸர்லாந்து | 6—18. | |
| டர்கி | 7—12. | அநுஷ்டிப்பதில்லை. |
| ஸோவியட் ருஷியா | 8—12,15 | பட்டணங்களில் 15 வரையில். |
| பெர்ஷியா | 7— | அநுஷ்டிப்பதில்லை. |
| இராக் | —— | சட்டமில்லை. |
| கொலம்பியா | —— | ஷை |
| லைபீரியா | —— | ஷை |
| பிரிடிஷ் இந்தியா | —— | பொதுச் சட்டமில்லை. மாகாணங்களில் ஸ்தல ஸ்தாபன ஊக்கத்தின் பேரில் 6—11 வரையில்; ஸெண்டரல் பிராவின்ஸில் 6—14. பெரும்பாலும் அநுஷ்டிப்பதில்லை. |

# பத்திராதிபரின் குறிப்பு

## ஆரம்பப் படிப்புக் கமிட்டி :—

அரசாங்கத்தார் ஆரம்பக் கல்வி விஷயமாக ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். இக் கமிட்டியின் மெம்பர்கள் சிலரே. சிலர் மானேஜர்கள். சிலர் சட்டசபை மெம்பர்கள். சிலர் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். ஆரம்பாசிரியர்கள் ஒருவரேனும் இக் கமிட்டியி லில்லாதது ஆச்சரியமே. ஆரம்பக் கல்வியின் சம்பந்தமாய் தம்முடைய தற்கால அபிப்பிராயத்தை கமிட்டியாருக்கு அரசாங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள். ஜனத் தொகை ஐயாயிரத்துக்கு மேலுள்ள ஊர்களில் ஆறு முதல் பதினொரு வயதிற்குட்பட்ட பையன்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கக் கட்டாயப் படிப்புமுறை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கத்தாரின் எண்ணம். காலஞ்சென்ற பெரியார் சாம்பியன் இது விஷயமாகத் தயாரித்த குறிப்பையும் கவனித்தார்கள். பணமிருந்த போதிலும் கட்டாயப் படிப்பு முறையை அமுலுக்குக் கொண்டு வருவதா லுண்டாகும் லாப நஷ்டத்தை ஊன்றிக் கவனித்தல் அவசியம் என்று தோன்றியதால், அரசாங்கத்தார் ஆரம்பக் கமிட்டியை ஆராய்ச்சி செய்யும்படி கேட்டிருக்கிறார்கள். அபராதம் முதலிய தண்டனை முறைகளைக் கையாளாது ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வழியுண்டா எனக் கமிட்டியாரைக் கேட்கின்றார்கள். மேலும் ஆரம்பக் கல்வி பரவுவதன் பொருட்டு கனம் சாம்பியன் சொல்லியிருக்கும் "பார்ட்டைம்" அல்லது "சற்று நேர பள்ளிக்கூடம்" உசிதமா வென்றும் தெரிய விரும்புகிறார்கள்.

கமிட்டி மெம்பர்கள் தம்முடைய பொது அபிப்பிராயத்தைத் தனியாய் தெரிவித்திருக்கிறார்கள். கமிட்டியார் ரிபோர்டை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். பத்திரிகைகளில் முன்பே மெம்பர்களின் குறிப்புகள் வெளிவந்திருப்பதை ஆசிரியர்கள் அறிந்திருக்கலாம். அபிப்பிராயங்களைக் கவனித்துப் பார்த்து ஆராய்ச்சி செய்தல் உபாத்தியாயர்கள் கடமையாகும். உபாத்தியாயருடைய உண்மையான கொள்கைகளை நம்முடைய பத்திரிகையில் வெளியிடமுடியும். இம் மூலமாகவே அரசாங்கத்தாருக்கு ஆசிரியரின் எண்ணத்தைத் தெரிவிக்கமுடியும். உண்மையைத் தெரிந்துகொண்டால் அரசாங்கத்தாரும் தகுந்த சீர்திருத்தங்களை ஏற்பாடு செய்யக் கூடும். உபாத்தியாயர்களுடன் கலந்து கொள்வதாலுண்டாகும் நன்மையும் வெளிப்படும்.

## இரக்ஷணைப் படங்கள்

'பாலர் கல்வி'யில் மாதந்தோறும் ஒரு இரக்ஷணைப் படம் பிரசுரிக்கப்படும்.

அபாயத்தில் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளும் முறைகளை பாலர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்றே, இப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இப்படங்களை மாணவர்கள் பார்க்கும்படி விளம்பரப் பலகையில் ஒட்டி வைத்து ஆசிரியர்களும் அப்படத்தைப் பற்றிப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். படத்தில் குறிக்கப்படும் அபாயம் எப்படி தெரிகிறதென்றும் அவ்வபாயம் நேரிடாமலிருப்பதற்கு எவ்வித ஜாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்றும் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் சொல்வது முறை. உதாரணமாக, இம்மலருடன் வெளியிடப்படும் முதல் இரக்ஷணைப் படம் (Safety First Picture) சாதாரணமாக குழந்தைகள் கவனமில்லாமல் செய்யும் ஒரு காரியத்தையும் அதனால் விளையும் தீங்கையும் குறிக்கின்றது. பழங்களைத் தின்று விட்டுத் தோலியை வழியில் போடுவது மிகவும் சகஜம். ஆனால் வேகமாக யாராவது அப்பாதையில் நடக்கும்பொழுது, அத்தோலியை மிதித்தால் வழுக்கி அவர்கள் விழுவதற்குக் காரணமாகும். முக்கியமாக நம் நாட்டில் வாழைப்பழத் தோலிகளை, ரஸ்தாவிலோ, அல்லது விளையாடும் இடத்திலோ எறிவது அநேகர் கீழே விழுவதற்குக் காரணமாகிறது. அப்படி விழுவதினால் பலத்த காயம்படலாம்; அல்லது எலும்புப் பூட்டு நகர்ந்தோ அல்லது உடைந்தோ போகலாம். இப்படிப் பழத் தோலிகளைக் கண்ட இடத்தில் போடுவது பிசகென்றும் அதனால் விளையும் கேடு மிகப் பல என்றும் மாணவர்களுக்கு விவரித்துச் சொன்னால் மிக நலமாக இருக்கும்.

---

# தென் இந்திய ஆசிரியர் ஐக்கியக் காப்பு நிதி

(1928 ஸ்தாபிக்கப்பட்டது)

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி,
15—3—1936.

சகோதரர்களே,

உபாத்தியாயர்களுக்குச் செலவு மிகுதி. வருமானம் குறைவு என்று யாருக்குத்தான் தெரியாது! ஆயினும் சொற்ப வருமானத்தையும் முழுதும் செலவழித்து விட்டால் நாம் வயது முதிர்ந்து இந்த வருமானம் கூட இல்லாத முதுமைப் பருவத்தில் என்ன செய்வது?

இதைக் கருதியே 1928ம் வருஷம் முதல் தென் இந்திய ஆசிரியர்களின் பொருட்டு ஒரு காப்பு நிதி நடத்தி வரப்படுகிறது. மிகவும் எளிய ஆசிரியர்கள் கூட இதில் சேர்ந்து அதனுடைய பலன்களை அடையலாம். மாதம் ஒன்றுக்கு 1 ரூ. வீதம் 25 வருஷத்திற்கு மேற்படாமல் ஆயுள் பரியந்தம் கட்டினால் 280 ரூபாயிலிருந்து 375 ரூ. வரையில் மரண காலத்திலோ 25ம் வருஷம் முடிவிலோ கொடுக்கப்படும். தவிர 5 வருஷத்திற்கு ஒரு முறை நிதியின் இருப்புக்களை கணக்கிட்டு லாபத்தின் ஒரு பங்கு சேர்த்துக் கொடுக்கப்படும்.

இவ்விதம் இந்நிதியில் சேருபவர்கள் அகாலத்தில் இறக்கும் சகோதர ஆசிரியர்களின் குடும்பத்திற்கு உதவி செய்கிறார்கள். இது அகால மரண சம்பவத்தையும் கருதி நம் குடும்பத்தாருக்கு, பொருள் உதவி செய்யும் ஏற்பாடும் ஆகிறது. இம்மாதிரி ஏற்பாடு நம் குடும்பத்தாரைப்பற்றி நாம் கொள்ளும் கவலையும் விசாரத்தையும் மிகவும் குறைக்கும்.

மாதம் ஒன்றுக்கு 2 அல்லது 3 அல்லது 4 ரூபாய்கள் செலுத்துபவர்களுக்கு மேற்கூறிய தொகையைப் போல் 2, 3 அல்லது 4 மடங்கு அதிக தொகைகள் கிடைக்கும்.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் அடையக்கூடிய சாதகங்களை இந்நிதியில் பெறலாம். இது உபாத்தியாயர்களால் உபாத்தியார் நிமித்தம் நடத்தபடும் ஒரு நிதி. இது இன்ஷ்யூரன்ஸ கம்பெனிகளைக் காட்டிலும் லாபகரமானது என்றும் அதற்கு காரணங்கள் யாவை என்றும் வெளியூர்களிலுள்ள உபாத்தியாயர்கள் நிதிக்கு பணம் செலுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள வசதிகள் முதலிய மற்ற விஷயங்களைப் பற்றியும், பாலர் கல்வி பின்வரும் மலர்களில் வெளிவரும். நிதியில் சேர விரும்புகிறவர்கள் விண்ணப்பங்களும் மேல்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையான.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.

Tm 211, N36
N36:1-1

# எலிமெண்டரி பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 | 2½ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |

### 2-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 | 3 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 | 3½ |

### 3-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 | 4 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| சிறுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 4 |

### 4-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 | 4½ |
| சிவிக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 | 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 | 4½ |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 | 5 |

### 5-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 | 6 |
| இயற்கை அற்புதங்கள் (3ஆம் புத்தகம்) | 0 | 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 | 5 |
| சிவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 | 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 | 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 | [illegible] |

பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புத்தக வியாபாரிகள்,
12, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

---

## தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி.

(1928 ஸ்தாபிக்கப்பட்டது)

எது லாபம்?

| | பிரதிவருஷம் கட்டும் தொகை | வருஷம் | கிடைக்கும் தொகை | |
|---|---|---|---|---|
| (1) | ரூ. 44 | 25 | ரூ. 1,000 | இதர இன்ஷ்யூரன்ஸ் கம்பனிகள் |
| (2) | ரூ. 50 | 25 | ரூ. 1,500 | தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய பாதுகாப்பு நிதி |

விடை

| | மொத்தம் கட்டிய தொகை. | கிடைக்கும் தொகை. |
|---|---|---|
| (1) | ரூ. 1,100 | ரூ. 1,000 |
| (2) | ரூ. 1,250 | ரூ. 1,500! |

ஸ்தாபித்தது : 1888 ] [ டெலிபோன் : 3693

# ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பிரசுர கர்த்தர்கள், சென்னை.

| | ரு. அ. பை. |
|---|---|
| நவீன தமிழ் அகராதி (500 பக்கங்கள் கொண்டது) | 1 8 0 |
| இளைஞர் இலக்கணம் I முதல் IV பாகங்கள் வரையில் முறையே 0-3-0, 0-5-0, 0-6-0, 0-8-0 | 1 6 0 |
| கிராம வாழ்க்கை நூல் | 0 4 0 |
| நூதன பூகோளம் ஞானமுத்து எழுதியது | 0 6 0 |
| குடும்ப சாஸ்திரம் ராஜ ரத்னம் பிள்ளை | 1 0 0 |

கேட்லாக் வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கோள்ளலாம்

PRINTED AT THE LIBERTY PRESS, G. T. MADRAS.

Regd. No. M. 3473.


## தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

(1928 ஸ்தாபிக்கப்பட்டது)

1. ஆசிரியர்கள் ஐக்கியத்தைப் பெருக்கும்,
2. திறமையான நிர்வாகத்தால்,
3. சொற்ப சந்தாவிற்கு,
4. மிகுந்த தொகை யளிக்கும்,
5. தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில்,

சேர விரும்புவோர் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி,

தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி,
41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.


இருபத்தேழாவது

# தென் இந்திய
# கல்வி மகாநாடு

மேமீ 6—7—8 தேதிகளில்

சேலத்தில் நடைபெறும்.

அத்துடன்

கல்விப் பொருட்காக்ஷியும் நடைபெறும்


Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.